செ.வெ.எண்.88 நாள்.31.10.2017.

**திருநெல்வேலி மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தொடர்பான – முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் – மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (31.10.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஒவ்வொரு அரசுத் துறைகளின் சார்பிலும் வழங்கப்படவுள்ள நலத்திட்ட உதவிகள் குறித்தும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள கட்டடங்கள் மற்றும் திட்டப் பணிகள் குறித்தும், புதிதாக அடிக்கல் நாட்டப்படவுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும், திருநெல்வேலி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக புதிதாக அறிவிக்கப்பட வேண்டிய திட்டப் பணிகள் குறித்தும், விரிவாக துறை அலுவலர்களுடன் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்தார்கள். மேலும், விழா தொடர்பாக முன்னேற்பாடு பணிகள் ஒவ்வொரு துறையிலும் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசனை செய்தார்.

பின்னர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது–

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா திருநெல்வேலி மாவட்டத்தில் 12.11.2017 அன்று சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கவும், பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார்கள். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு புதிய திட்டங்களையும் அறிவிக்கவும் உள்ளார்கள். இவ்விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் அதிகளவிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும். துறை அலுவலர்கள் பயனாளிகளை பாதுகாப்பாக அழைத்து வர முன்னேற்பாடுகளை செய்திட வேண்டும். அனைத்து பயனாளிகளையும் அவசியமாக அழைத்து வரவேண்டும். காவல் துறையினர் தேவையான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திட வேண்டும். பல்வேறு துறைகளின் மூலம் புதிதாக கட்டப்பட்டு, திறக்கப்பட தயார் நிலையில் உள்ள கட்டடங்கள் மற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகள் விவரங்களையும், புதிதாக அடிக்கல் நடப்பட வேண்டிய திட்டப் பணிகள் குறித்த விவரங்களை விடுபடாமல் முழுமையாக தயார் செய்திட வேண்டும்.

இவ்விழாவில், அனைத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பாக விழா முன்னேற்பாடு பணிகளை மேற்கொண்டு, மற்ற மாவட்டங்களை காட்டிலும் திருநெல்வேலி

மாவட்டத்தில் இவ்விழா மிக, மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது என்ற பெருமையை தேடித்தர வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.வசந்தி முருகேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் (அம்பாசமுத்திரம்) திரு.ஆர்.முருகையாபாண்டியன், (தென்காசி) திரு.செல்வமோகன்தாஸ்பாண்டியன், (வாசுதேவநல்லூர்) திரு.அ.மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்தி குமார்,இ.கா.ப., மாநகர காவல் துணை ஆணையர் திரு.சுகுணா சிங்,இ.கா.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாநில கூட்டுறவு விற்பனை இணைய துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், திருநெல்வேலி–தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் சங்க தலைவர் திரு.ஆறுமுகம், நெல்லை பேரங்காடித் தலைவர் பல்லிக்கோட்டை திரு.செல்லத்துரை, அக்ரோ தலைவர் திரு.மகபூப்ஜான் மற்றும் முக்கிய பிரமுகர்கள் திரு.பரணி சங்கரலிங்கம், திரு.சுதா பரமசிவம், திரு.செவல் முத்துசாமி, திரு.ஜெரால்டு, திரு.செந்தில் ஆறுமுகம் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.